அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழுவிற்கு மூன்று உறுப்பினர்களையும், தமிழ்நாடு கால்நடை மற்றும் அறிவியல் மருத்துவப் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவிற்கு ஒரு உறுப்பினரையும் மற்றும் மாநில நூலகக் குழுவிற்கு ஒரு உறுப்பினரையும் இச்சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. தேர்ந்தெடுக்கப் படுபவரின் பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகளாகும். இருப்பினும், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்த நாளோடு இப்பதவிகளின் காலம் முடிவடையும்.

எனவே, வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 20-4-1993 செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 21-4-1993 புதன்கிழமை 3.00 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 22-4-1993 வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்கள் எண்ணிக்கை வெற்றிடங் களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 27-4-1993 செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கும் பிற்பகல் 1.30 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

4. கவன ஈர்ப்பு.

(அ) பேராவூரணித் தொகுதி பெருமகளூர் மேல்நிலைப்பள்ளிக் கட்டிடம் இடிந்துள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஆர். சிங்காரம் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார் திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “பேராவூரணி தொகுதி பெருமகளூர் மேல்நிலைப் பள்ளிக் கட்டிடம் இடிந்துள்ளது குறித்த” அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சருடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கல்வி அமைச்சர்.

*மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 11.25

அறிக்கை.

1. பேராவூரணி தொகுதி, பெருமகளூர் அரசு மேல்நிலைப் பள்ளி 1-7-1962-ல் துவக்கப்பட்டது. இப்பள்ளியில் 975 மாணவர்கள் பயில்கின்றனர். பள்ளிக்கு தற்போது 11 வகுப்பறைகள் (கான்கீரிட் தள கூரை கட்டிடம்) உள்ளன.

2. தமிழகத்தில் ஏறத்தாழ 2,762 மேல்நிலை/உயர்நிலைப் பள்ளிகள் செயல்படுகின்றன. அரசின் கடுமையான நிதி நெருக்கடி நிலையிலும் இப்பள்ளிக் கட்டிடங்கள் பழுது பார்க்கவும், புதிய பள்ளிக்கட்டிடங்கள் கட்டவும் அரசு ஆண்டுதோறும் இயன்ற வரையில் இரண்டாம் பகுதித் திட்டமாக நிதி ஒதுக்கீடு செய்துவருகிறது. 1993–94-ம் ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் ரூ. 75 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், வீட்டுவசதி அபிவிருத்திக் கழகத்திடமிருந்து பள்ளிக் கட்டிடங்களுக்கென நிதி உதவி பெற முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. உலக வங்கியிடமிருந்தும் பள்ளிக் கட்டிடங்களுக்கென நிதி உதவி பெற பெரு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அரசு ஒதுக்கீடு செய்யும் நிதி ஒதுக்கீட்டிலிருந்து, நிதி வசதியைப் பொறுத்து பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

3. 1992–93-ம் ஆண்டில் பொதுப்பணித் துறைக்கு ஒதுக்கப்பட்ட பள்ளி மற்றும் கல்லூரிக் கட்டிடங்களுக்கு வருடாந்திர பராமரிப்பு மற்றும் பழுதுப்பணி (Annual Maintenance and repairs) என்ற தலைப்பில் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து ஒரு பகுதியை அரசு உயர்நிலை/மேல் நிலைப் பள்ளிகளுக்கு சிறப்பு மராமத்துப் பணிகளை கவனிக்கும் பொருட்டு பொதுப்பணித் துறையை அரசு கோரியது. அதன் தொடர்பாக தலைமைப் பொறியாளர் (கட்டிடம்) பொதுப்பணித் துறை அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு 1992–93-ல் சிறப்பு மராமத்து பணிக்காக 260.28 லட்சம் ஒதுக்கி, அத்தொகை முழுவதையும் பயன்படுத்துவதற்கான பணிகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன.

4. பேராவூரணி தொகுதியைச் சார்ந்த பெருமகளூர் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு சிறப்பு மராமத்து மற்றும் முன்னேற்றப் பணிக்கான மதிப்பீடு பெற்ற பின், நிதி வசதியைப் பொறுத்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

1993 ஏப்ரல் 13]

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிற அறிக்கையை நான் பார்த்தேன். ஆனால் பெருமகளூர் மேல்நிலைப் பள்ளியில் ஒரு கட்டடம் இடிந்து அபாயகரமான சூழ்நிலையில் இருக்கிறது. அந்தப் பிள்ளைகள் பாதிக்கப்படக்கூடிய அளவில் மிக அவசரமான ஒரு விஷயமாக இருக்கின்ற காரணத்தால்தான் இதை நான் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் மூலமாக இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆனால் இந்த அறிக்கையிலே பெருமகளூர் மேல்நிலைப்பள்ளிக் கட்டிடம் இடிந்து போனது குறித்தே இல்லை. இடிந்து போனது உண்மைதான் என்றாலும் கூட அது குறித்து முழு விவரத்தையும் இந்த அவையில் தெரிவிக்காமல் நிதிநிலைப் பற்றாக்குறை குறித்து தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. எனவே, தயவு செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை உடனடியாக அவசரம், அவசியமாகக் கருதி அந்தக் கட்டிடத்தைப் பழுது பார்ப்பதற்கான அவசர நடவடிக்கை எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்த அறிக்கையைப் பெற்று அங்கே முன்னேற்றப் பணிக்கான வேலைகளை இந்த அரசு தொடரும்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிக்கை பெற்று நடவடிக்கை எடுப்பேன் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் சொல்வது அந்தப் பள்ளிக் கட்டிடம் இடிந்துபோய் அபாயகரமான நிலையில் இருக்கிறது. ஆகவே அந்த அபாயகரமான நிலையைத் தவிர்ப்பதற்காக உடனடியாக அந்த ஸ்பாட்டுக்கு விரைந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பார்த்து அந்தக் குழந்தைகளை வேறு இடத்திற்கு மாற்றியாவது ஏற்பாடு செய்து, அதற்கு மதிப்பீடு தயார் செய்து உடனடியாகக் கட்டிடங்கள் கட்டுவதற்கு மீண்டும் முயற்சிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்தை வைத்துக்கொண்டு நான் எதையும் இங்கே சொல்ல முடியாது. ஆகவே துறையின் மூலமாகத்தான் நான் நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கிறது. எனவே அதுகுறித்து அரசு பரிசீலிக்கும்.

(ஆ) சங்கராபுரம் தொகுதி கல்வராயன் மலை, கோரப்பட்டு பகுதியில் சாலை பழுதுபட்டிருப்பதால் போக்குவரத்து பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு.